**கூடுதல் மகிளா நீதிமன்றம் (நடுவர் நிலை), தஞ்சாவூர்.**

**முன்னிலை: செல்வி. வெ. வனிதா பி. ஏ., எல். எல். பி.,**

நீதித்துறை நடுவர், கூடுதல் மகிளா நீதிமன்றம் (நடுவர் நிலை), தஞ்சாவூர்

2026-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19 -ம் நாள் புதன்கிழமை,

**Crlmp. No.1302/2026**

**in**

**DVC No.40/2025**

ரிஷா ...மனுதாரர்/ புகார்தாரர்

/எதிர்/

சதீஷ் ... எதிர்மனுதாரர்

இம்மனுவானது கடந்த 24.06.2026 அன்று Crlmp. No.1302/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, என் முன்பு 19.08.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. E. இளங்கோ., B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S. சத்தியமூர்த்தி., B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதத்தை கேட்டும் மனு, வழக்காவணங்களை பரிசீலித்தும் இதுநாள் வரை எனது சீரிய பரிசீலனையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும் ...

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர் தரப்பில் பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டப் பிரிவு 23 ன் கீழ் அசல் மனு முடியும் வரை இடைக்கால உத்தரவிற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் மனுவின் சுருக்கம்:**

இம்மனுவின் மனுதாரர் தனது மனுவில், மனுதாரரும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 05.12.2024 ல் திருமணம் நடைபெற்றதாகவும், மனுதாரர் T.Tech படித்துள்தாகவும், திருமணத்திற்கு முன்பு AINQA ADM Private Ltd., டிநறுவனத்தில் வேலை பார்த்ததாகவும், எதிர்மனுதாரர் AME, B.B.A, B.Tec படித்துள்தாகவும், தங்கள் திருணம் தஞ்சாவூர் இணை சார்பதிவாளர் எண்.1 ல் டந்த 06.12.2024 ம் தேதி திருமண பதிவு வரிசை

எண். TMR/தஞ்சாவூர் இணை.1/518/2024 ல் பதிவு செய்துள்ளதாகவும், திருமணத்திற்கு பின்பு மனுதாரர் வேலையை விட்டு விட்டதாகவும், திருமண நிச்சயம் 22.08.2024 ல் நடைபெற்றதாகவும், அதற்கு மனுதாரரின் குடும்பத்தினர் ரூ.2 லட்சம் செலவு செய்து நடத்தியதாகவும், ஒரு பவுன் மோதிரம், ரூ.10,000 க்கு புது ஆடைகளும் மனுதாரர் தரப்பில் கொடுத்ததாகவும், மனுதாரரின் குடும்பத்தினர் எதிர்மனுதாரருக்கு தங்க நகைகள், செயின், மோதிரம், காசு கட்டுதல் போன்ற சீர்வரிசை செய்ததாகவும், 04.12.2024 ல் திருமண வரவேற்பு நடைபெற்றதாகவும், திருமணத்திற்கு பின்பு மனுதாரர் எதிர்மனுதாரர்களுடன் அவர்களது வீட்டில் ஒன்றாக வசித்ததாகவும், திருமணத்திற்கு பின்பு எதிர்மனுதாரர் மது அருந்தியதாகவும், சிகரெட் பிடிக்கும் பழக்கம் உடையவர் எனவும், சிகரெட் பிடித்து மனுதாரரின் முகத்தில் ஊதி அசௌகரியத்தை ஏற்படுத்தினார் எனவும், திருமணத்திற்கு முன்பு அதனை மறைத்து விட்டதாகவும், பின்பு எதிர்மனுதாரர் மாதம் ரூ.5,00,000/- சம்பளம் பெறும் நிலையில் அவர்கள் வசதிக்கு ஈடாக கூடுதலாக 50 பவுன் நகைகள் கேட்டதாகவும், திருமணத்தின்போது மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள நகைகள் மற்றும் ரொக்க பணம் மனுதாரர் தரப்பில் செலவு செய்யப்பட்டதாகவும், பின்பு 1 ஆம் எதிர்மனுதாரர் வேலை நிமித்தம் UAE நாட்டிற்கு சென்று விட்டதாகவும், அப்போது 3 ஆம் எதிர்மனுதாரர் இங்கு நடைபெறும் அனைத்தையும் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு போன் செய்து சொல்லி விடுவார் எனவும், 2,3 எதிர்மனுதாரர்கள் மனுதாரரை அவரது பெற்றோர் வீட்டில் வரதட்சணையாக நகைகள் மற்றும் பணம் கேட்டு கொடுமைப்படுத்தியதாகவும், வீட்டு வேலைகள் செய்ய சொல்லி துன்புறுத்தியதாகவும், மனுதாரருக்கு காய்ச்சல் ஏற்பட்ட போதும் மருத்துவமனைக்கு அழைத்து செல்லாமல் கொடுமைப்படுத்தியதாகவும், இதனை கேட்டபோது 3 ஆம் எதிர்மனுதாரர் கேட்ட வரதட்சணையை தர துப்பில்லை நீயெல்லாம் எங்களிடம் வந்து கேட்குறாயா நியெல்லாம் சோத்த திங்காம பீய தின்னு என கேவலமாக திட்டியதாகவும், இதனால் மன உளைச்சலுக்கு ஆளாகியதாகவும், வேளா வேளைக்கு உணவு தராமல் கொடுமைப்படுத்தியதாகவும், பெற்றோரிடம் பேச விடாமல் நிபந்தனை விதித்திருந்ததாகவும், இதனை பற்றி மனுதாரர் 1 ஆம் எதிர்மனுதாரரிடம் சொன்னதற்கு எங்க அம்மா அப்படித்தான் பேசுவாங்க நீ ஒன்னும் சொல்லக்கூடாது, அப்படி சொன்னா உன்ன வாழாவெட்டியாக்கிடுவோம் என கூறியதாகவும், வயிற்று வலி ஏற்பட்ட போது எதிர்மனுதாரர்கள் மனுதாரரை உங்க வீட்ல வாங்கி செலவு பண்ணிக்கோ என கூறியதாகவும், 2025 பொங்கல் சமயத்தில் மனுதாரர் வீட்டில் 12.01.2025 அன்று பொங்கல் சீர்வரிசை அளித்தாகவும், அதில் திருப்தி அடையாத எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் குடும்பத்தை மரியாதை குறைவாக நடத்தியதாகவும், எதிர்மனுதாரர்கள் செய்த கொடுமைகளை பெற்றோரிடம் கூறினார் அவர் மன வருத்தம் அடைவார்கள் என மனுதாரர்

சொல்லவில்லை எனவும், பின்பு மனுதாரர் எதிர்மனுதாரருடன் வெளிநாட்டிற்கு சென்றதாகவும், அங்கு வசிக்கும் போது தன்னை மனைவியாக நடத்தவில்லை எனவும், மாதவிடாய் காலத்தில் வயிற்று வலி ஏற்பட்ட போதும் கண்டுக்கொள்ளவில்லை எனவும், அந்த சமயத்தில் வலுக்கட்டாயப்படுத்தி உடலுறவு கொண்டார் எனவும், தன்னை பாலியல் பொம்மைப்போல் பாவித்ததாகவும், எதிர்மனுதாரருக்கு மது, கஞ்சா உள்ளிட்ட பழக்கம் இருந்ததாகவும், மேலும், நள்ளிரவில் 12 மணியளவில் மனுதாரரை வீட்டில் பூட்டி வைத்து விட்டு வெளியில் சென்று வந்ததாகவும், துணிகளை பார்த்தபோது துர்நாற்றம் வீசியதாகவும், தகாத உறவு கொண்டு வந்துள்ளார் எனவும், அதற்காக தனது வருமானத்தை செலவு செய்து வந்தார் எனவும், எது கேட்டாலும் மனுதாரரை ஆபாசமாக திட்டுவார் எனவும், செல்போனில் பாலியல் வீடியோக்களுக்கு அடிமையாகியிருந்தார் எனவும், அவ்வாறு போனில் வீடியோ பார்த்து மாஸ்டர்பேட் செய்வார் எனவும், இதனை எதிர்மனுதாரரிடம் கேட்டதற்கு பல ஆண்டுகளாக இவ்வாறு செய்து வருவதாக கூறியதாகவும், போதை பொருட்கள் உபயோகித்து வருகிறார் எனவும், சமைத்த உணவு பொருள் சரியில்லை என மனுதாரரின் கையை முறுக்கி பிடித்து தள்ளி விட்டதாகவும், இதனால் மனுதாரர் மிகுந்த வலி வேதனை அனுபவித்ததாகவும், மற்ற எதிர்மனுதாரர்கள் போனில் பேசியதை கேட்டு தன்னை கொடுமைப்படுத்தினார் எனவும், வரதட்சணை கேட்டும் தராததால் தன்னை வீட்டை விட்டு வெளியே துரத்தியதாகவும், விமான டிக்கெட் போட்டு தர கேட்டதற்கு டிக்கெட் விலை அதிகமாக இருப்பதால் என்னால் போட்டுத்தர முடியாது நீ எக்கேடு கெட்டா எனக்கு என்ன யாக்கிட்ட வேணாலும் டிக்கெட் கேட்டு வாங்கி போ என கூறியதாகவும், மனுதாரரின் பெற்றோர் இந்தியா திரும்ப ஏற்பாடு செய்ததாகவும், அப்போது விமான நிலையத்தில் இறக்கி விட்டு கையெழுத்து போடாமல் உடனடியாக போய் விட்டதாகவும் விமானத்தில் ஏறுவதற்கு கையொப்பம் போடாமல் சென்றுவிட்டதாகவும் பின்பு மனுதாரர் எதிர்மனுதாரரை கெஞ்சி கையொப்பம் போட வைத்ததாகவும், 1 ஆம் எதிர்மனுதாரர் ஸ்பான்சர் விசாவில் வந்துள்ளதாகவும், UAE நாட்டை விட்டு வெளியேறும் போது ஸ்பான்சர் உரிய ஆவணங்களில் கையெழுத்து போட்டால் மட்டுமே இந்தியா திருப்பி அனுப்புவார்கள் எனவும், எதிர்மனுதாரர் தனது கடமையை செய்யாமல் மிகுந்த மன உளைச்சல் ஏற்படுத்தினார் எனவும், இந்தியா வந்த பிறகு தான் கருவுற்றதாகவும், அதனை எதிர்மனுதாரரிடம் போன் மூலம் தெரியபடுத்தியபோது இரண்டு வாரம் தானே இங்க இருந்த என சந்தேகப்பட்டு பேசியதாகவும், பின்பு, மனுதாரரும், 1 ஆம் எதிர்மனுதாரரும் தனியாக இருந்த போது நடந்த விவரங்களை மனுதாரரின் தந்தையிடம் கூறியதாகவும், இதனால் அவர் மன வேதனை அடைந்ததாகவும், பின்பு 1 ஆம் எதிர்மனுதாரர் மனுதாரர் செல்போனை பிளாக் செய்து விட்டதாகவும், 24.04.2025 ல் அதிக இரத்தப்போக்கு ஏற்பட்டு கரு

கலைந்துவிட்டதாகவும், பின்பு எதிர்மனுதாரர் தன்னுடன் வாழ விருப்பம் இல்லை என அவர்களின் உறவினர்கள் மூலம் கூறியதாகவும், எதிர்மனுதாரர்கள் மனுதாரரை உடல் , மன ரீதியாக வன்கொடுமை செய்யதுள்ளதாகவும், மேலும், 1 ஆம் எதிர்மனுதாரர் வெளிநாட்டில் வேலை பார்த்து மாதம் ரூ.4,50,000/- லட்சம் சம்பாதித்து வருவதாகவும், ஓவர்டைம் வேலை பார்க்கும் போது ரூ.5 லட்சம் வரை கிடைக்கும் எனவும், , 1 ஆம் எதிர்மனுதாரர் வேலைபார்க்கும் நிறுவனம் ஆண்டு முடிவில் நிறுவனத்திற்கு கிடைக்கபெறும் லாபத்தை அதன் ஊழியர்களுக்கு பங்காக கொடுக்கும் வகையில் எதிர்மனுதாரருக்கு ரூ.10 லட்சத்திற்கு மேல் கிடைக்கிறது எனவும், எனவே, 1 ஆம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு கணவர் என்ற முறையில் , கணவரின் வசதிக்கேற்ப அவருடன் வாழ்ந்த பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்ப மனுதாரருக்கு உணவு, உடை, உறைவிடம், மருத்துவம், பண்டிகை செலவு ஆகியவற்றிற்கு ஜீவனாம்சமாக மாதம்தோறும் ரூ.2,50,000/- தர கடமைப்பட்டவர் என கூறி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**2)<u>எதிர்மனுதாரரின் அதிகாரம் பெற்ற முகவர் தரப்பில் தாக்கல் செய்யும் எதிருரை</u>:**

எதிர்மனுதாரர் தனது எதிருரையில், மனுதாரரின் மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல எனவும், தள்ளுபடி செய்யப்பட வேண்டுமெனவும், மனுதாரரின் மனு ஏற்புடையதல்ல எனவும், மனுதாரர் மனுவில் பத்தி 2,3 ல் சொல்லியுள்ளதை ஒப்புக்கொள்வதாகவும், எதிர்மனுதாரர் UAE நாட்டில் Emirate Airlines நிறுவனத்தில் Engine Overhal technician வேலை பார்த்து மாதம் ரூ.4,50,000/- சம்பாதித்து வருவதாக கூறியது தவறு எனவும், உண்மையில் எதிர்மனுதாரர் மாதம் ரூ.1,60,000/- மட்டும் எனவும், அதில் மாத வாடகை ரூ.80,000/- எனவும், உணவு செலவிற்கு மாதம் ரூ.20,000/-மும், நிறுவனத்தில் கடன் பெற்றதற்காக ரூ.6,000/- பிடித்தம் போக ரூ.30,000/- முதல் ரூ.40,000/- வரை மட்டும் மிச்சப்படுத்தக்கூடும் எனவும், ஓவர் டைம் பார்ப்பதாக கூறுவது தவறு எனவும், வருடம் ஒன்றிக்கு ரூ.10,00,000/- லாபம் பெறுவதாக கூறுவது அப்பட்டமான பொய் எனவும், எதிர்மனுதாரர் தகப்பனாருக்கு சொந்த வீடு உள்ளது எனவும், எதிர்மனுதாரருக்கு சொந்த வீடு உள்ளதாக மனுதாரர் கூறியது தவறு எனவும், மனுதாரருக்கு போடப்பட்ட 45 பவுன் நகைகள் மற்றும் சீர்வரிசை சாமான்கள் அனைத்தும் மனுதாரர் வசம் உள்ளது எனவும், மனுதாரர் தற்போது ஹைதராபாத்தில் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.60,000/-க்கு மேல் வருமானம் பெறுவதாகவும், மனுதாரர் மாதம் ரூ.2,50,000/- வாழ்க்கைப்பொருளுதவியாக கேட்டதில் இருந்தே மனுதாரர் ஒரு சராசரி குடும்பத்தை சேர்ந்த பெண் வாழ்வதற்கு ஏற்ற தொகை இல்லை எனவும், மனுதாரர் ஆடம்பரமாக வாழ்வதில் பிரியர் எனவும், மனுதாரரின் தகப்பனார் அரசு ஊழியராக பணிபுரிந்து

வருவதாலும், மனுதாரருக்க சகோதரர், சகோதரி யாரும் இல்லை என்பதாலும், மனுதாரின் வருமானத்தை கொண்டும் மனுதாரருக்கு போதுமான அளவு வருமானம் கிடைக்கும் நிலையிலும் இம்மனுவை தாக்கல் செய்திருப்பது நிலைக்கத்தக்கதல்ல எனவும், எனவே இம்மனு மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென குறிப்பிட்டு எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

**3. இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா?**

3.1 இந்த மனு மற்றும் எதிருரை கவனமாக பரிசீலிக்கப்பட்டன. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. இருதரப்பிலும் ஆவணங்கள் குறுக்கீடு செய்யவில்லை. இந்த மனுவில் உபயதரப்பினர்கள் கணவன் மனைவி என்பதும், அவர்களுக்கிடையே பிரச்சனை ஏற்பட்டு, உபயதரப்பினர்கள் பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள் என்பதும், ஒப்புக்கொள்ளப்படும் சங்கதியாகும்.

3.2 இந்த மனுவினை இடைக்கால பராமரிப்பு தொகைக்கு அனுமதிக்க இயலுமா என்பதை சீர்தூக்கி பார்க்கும்போது, மனுதாரர் தனது மனுவில் 1 ஆம் எதிர்மனுதாரர் வெளிநாட்டில் வேலை பார்த்து மாதம் ரூ.4,50,000/- லட்சம் சம்பாதித்து வருவதாகவும், ஓவர்டைம் வேலை பார்க்கும் போது ரூ.5 லட்சம் வரை கிடைக்கும் எனவும், 1 ஆம் எதிர்மனுதாரர்நிறுகூனம் ஆண்டு முடிவில் நிறுவனத்திற்கு கிடைக்கபெறும் லாபத்தை அதன் ஊழியர்களுக்கு பங்காக கொடுக்கும் வகையில் எதிர்மனுதாரருக்கு ரூ.10 லட்சத்திற்கு மேல் கிடைக்கிறது எனவும், கூறியுள்ளார். எதிர்மனுதாரர் தனது எதிருரையில், வெளிநாட்டில் வேலை பார்த்து மாதம் ரூ.4,50,000/- லட்சம் சம்பாதிப்பதாக கூறியுள்ளது தவறு எனவும், உண்மையில், எதிர்மனுதாரர் மாதம் ரூ.1,60,000/- மட்டும் வருமானம் பெறுவதாகவும், அதில் மாத வாடகை ரூ.80,000/- எனவும், உணவு செலவிற்கு மாதம் ரூ.20,000/-மும், நிறுவனத்தில் கடன் பெற்றதற்காக ரூ.6,000/- பிடித்தம் போக ரூ.30,000/- முதல் ரூ.40,000/- வரை மட்டும் மிச்சப்படுத்தக்கூடும் எனவும், ஓவர் டைம் பார்ப்பதாக கூறுவது தவறு எனவும், வருடம் ஒன்றிக்கு ரூ.10,00,000/- லாபம் பெறுவதாக கூறுவது அப்பட்டமான பொய் எனவும், மேலும், மனுதாரர் தற்போது ஹைதராபாத்தில் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து மாதம் ரூ.60,000/-க்கு மேல் வருமானம் பெறுவதாகவும், கூறியுள்ளனர். இருப்பினும், இருதரப்பிலும் அது சம்பந்தமான ஆவணங்கள் எதையும், தாக்கல் செய்யவில்லை.

3.3 உபயதரப்பினர்கள் வருவாய் ஈட்டும் தகுதி குறித்தும் உண்மையில் இருவரும் என்ன பணி செய்கிறார்கள் என்பது குறித்தும் முழுமையான விசாரணையில் மட்டுமே முடிவு செய்ய இயலும். மேலும் தரப்பினர்களுக்கிடையே வேறு வழக்குகளில் ஏதேனும் ஜீவனாம்சத்திற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதற்கு எவ்வித சான்றும் இருதரப்பிலும் தாக்கல் செய்யவில்லை. எப்படியிருப்பினும், 1ஆம் எதிர்மனுதாரர் கணவர் என்ற முறையில் மனைவிக்கு செய்ய வேண்டிய பராமரிப்பு கடமைகள் 1 ஆம் எதிர்மனுதாரருக்கு உள்ளது என்பதாலும், மேலும், எதிர்மனுதாரர் தனது எதிருரையில் மாதம் ரூ.1,60,000/- மட்டும் வருமானம் பெறுவதாக கூறியுள்ளதாலும், இம்மனுவின் 1ஆம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இடைக்கால ஜுவனாம்சமாக மாதம் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)த்தை இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து கொடுக்கக் கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

3.4 இறுதியாக, இம்மனுவின் 1ஆம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு இடைக்கால ஜுவனாம்சமாக மாதம் ரூ.10,000/- (ரூபாய் பத்தாயிரம் மட்டும்)த்தை இம்மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து வழங்க வேண்டும் என்றும் இனி செலுத்த வேண்டிய இடைக்கால ஜீவனாம் தொகையை பிரதி ஆங்கில மாதம் 5 ஆம் தேதிக்குள், இந்த அசல் மனு விசாரணை முடியும் வரை வழங்கவேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கப்பட்டு 2026-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

VANITHA VENKADACHALAM

Digitally signed by VANITHA VENKADACHALAM
Date: 2026.08.19 18:51:48 -0300

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நடுவர் நிலை),

தஞ்சாவூர்.

**இணைப்பு:-**

1. மனுதாரர்  தரப்பு சாட்சி :- இல்லை

2. மனுதாரர்  தரப்பு சான்றாவணங்கள்:-இல்லை

3. எதிர்மனுதாரர்  தரப்பு சாட்சி:- இல்லை

4. எதிர்மனுதாரர்   தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை

VANITHA VENKADACHALAM
Digitally signed by VANITHA VENKADACHALAM
Date: 2026.08.19 18:51:53 -0300

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம் (நடுவர் நிலை)
தஞ்சாவூர்.